**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 04–ஆம் நாள் சனிக்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு,பராபவ ஆண்டு, ஆனி மாதம் 20ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 380/2025**

**CNR No. TNNM14-001040-2025**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

சேந்தமங்கலம் காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.158/2025)

எதிர்

செல்வம், த/பெ. கந்தசாமி,

8/99, மேதரமாதேவி,

முத்துக்காப்பட்டி,

சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 08.07.2025 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 07.08.2025 |
| 3. | எதிரி கைது செய்யப்பட்டு | எதிரி கைது செய்யப்பட்ட நாள் / பிணையில் சென்ற நாள் |

<table>
<tr><td></td><td>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td>08.07.2025</td><td>08.07.2025</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) r/w 4(1)(a) TNP Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>12.01.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>14.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>சாட்சிகளின் பெயர்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>ராமச்சந்திரன்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>லெனின்</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>29.06.2026</td></tr>
<tr><td>10.</td><td>BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி</td><td>30.06.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்புரை பகரப்பட்ட நாள்</td><td>04.07.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச் சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டுநிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை சட்டப்பிரிவு 4(1)(C) r/w 4(1)(a) TNP Act ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | 04.07.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

இந்த வழக்கானது 18.11.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. P. கவிதா, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. P. பாலகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 30.06.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 08.07.2025ம் தேதி 17.30 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலைய சரகம் சேந்தமங்கலம் பெருமாபாளையம் காலனி அருகில் இவ்வழக்கின் எதிரி செல்வம் என்பவர் அரசு மதுபான பாட்டில்களான 180 ML Express 29 பாட்டில்கள் என அரசு மதுபான பாட்டில்களில் மொத்தம் 5.220 லிட்டர் விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act 2024 –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 380/2025 ன் கீழ் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டது.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், சட்டப்பிரிவு 4(1)(C) r/w 4(1)(a) TNP Act –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகளின் சாராம்சம்

குறித்து எதிரிக்கு விளக்கிக்கூறி எதிரியிடம் வினவிய போது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** மற்றும் **அ.சா.2** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.2** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

**5.1. அ.சா.1 ராமச்சந்திரன் தனது சாட்சியத்தில்,** கடந்த 08.07.2025ம் தேதி 17.30 மணிக்கு சேந்தமங்கலம் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.லெனின் அவர்களின் தலைமையில் தானும், முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோரும் மதுவிலக்கு குற்ற தடுப்பு நடவடிக்கையாக சேந்தமங்கலம் பெருமாபாளையம் காலனி அருகே கண்காணித்து சென்றபோது அங்கு சந்தேகப்படும்படி அங்கு நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட எதிரியை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் செல்வம் என்றும், அரசு மதுபான பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், தான் தன்வசம் 180 மி.லி. அளவு உள்ள Express -29 அரசு மதுபான பாட்டில்களை வைத்திருப்பதாகவும், ஒப்புக்கொண்டவரை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.லெனின் 18.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்ததாகவும், பின்பு எதிரி தானாக முன்வந்த ஆஜர் செய்த 180

மி.லி. அளவு உள்ள Express –29அரசு மதுபான பாட்டில்களை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.லெனின் 18.30 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் மற்றும் தன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் காவல் உதவி ஆணையாளர் (கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு எதிரி மீது சேந்தமங்கலம் காவல்நிலைய குற்ற எண்.158/2025–ன் சட்டபிரிவுகள் 4(1) (C) TNP Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் கைப்பற்றதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2. அ.சா.2 லெனின் தனது சாட்சியத்தில்**, கடந்த 08.07.2025ம் தேதி 17.30 மணிக்கு சேந்தமங்கலம் தனது தலைமையில் தலைமை காவலர் திரு.ராமச்சந்திரன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோரும் மதுவிலக்கு குற்ற தடுப்பு நடவடிக்கையாக சேந்தமங்கலம் பெருமாபாளையம் காலனி அருகே கண்காணித்து சென்றபோது அங்கு சந்தேகப்படும்படி அங்கு நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட எதிரியை பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் செல்வம் என்றும் அரசு மதுபான பாட்டில்களை வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும், தான் தன்வசம் 180 மி.லி. அளவு உள்ள Express –29 அரசு மதுபான

பாட்டில்களை வைத்திருப்பதாகவும், ஒப்புக்கொண்டவரை 18.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்ததாகவும், பின்பு எதிரி தானாக முன்வந்த ஆஜர் செய்த 180 மி.லி. அளவு உள்ள Express –29 அரசு மதுபான பாட்டில்களை 18.30 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் தலைமையில் தலைமை காவலர் திரு.ராமச்சந்திரன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய் குற்ற எண்.158/2025 சட்டபிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்ததாகவும், கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் காவல் உதவி ஆணையாளர் (கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் தலைமையில் தலைமை காவலர் திரு.ராமச்சந்திரன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மணிகண்டன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இறுதியாக எதிரியின் மீது சட்டபிரிவு 4(1)(C) TNP Act–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**6)** இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1)(ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 மற்றும் அ.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டடைன வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10.1. இவ்வழக்கில் எதிரி மீது அரசால் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக சட்ட விரோதமாக மதுபானங்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

10.2. மேற்படி குற்றச்சாட்டை நிரூபிக்க முதலில் எதிரியிடமிருந்து, மேற்படி அளவுக்கு அதிகமான மதுபானங்களை கைப்பற்றியதாக கூறும் பொருண்மையை நிரூபிக்க வேண்டும். அதன் பொருட்டு, இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.1 தலைமை காவலர் திரு. ராமச்சந்திரன் விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி மதுபான பாட்டில்கள் சேந்தமங்கலம் பெருமாபாளையம் காலனி அருகில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அரசு வழக்கு உள்ளது.

**10.3.** இவ்வழக்கில் மதுபான பாட்டில்களை பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் உடன் இருந்த அ.சா.1 தலைமை காவலர் திரு. ராமச்சந்திரன் மற்றும் முதல் நிலை காவலர் திரு. மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றியதாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 காவல் உதவி ஆய்வாளர் லெனின் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில்

"சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான்"

என சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என சாட்சியம் அளித்துள்ள நிலையில் கைப்பற்றுதல் மகஜரில் தனி நபர் சாட்சிகள் யாரையும் சேர்க்காதது ஏற்க்கதக்கது அல்ல. எனவே அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் உண்மையில் சம்பவ இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து மதுபான பாட்டில்களை கைப்பற்றும்போது தயார் செய்யப்பட்டதா என்ற பொருண்மை கேள்விக்குள்ளாகிறது.

**10.4.** இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.1 தலைமை காவலர் திரு. ராமச்சந்திரன் தனது சாட்சியத்தில் எதிரி மதுபான பாட்டில்களை குறைந்த விலையில் வாங்கி அதிக விலைக்கு விற்க வைத்திருப்பதாக கூறினார் என சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அது குறித்து எதிரியிடம் இருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை.

**10.5.** மேலும் இவ்வழக்கில் எதிரி மதுபான பாட்டில்களை விலைக்கு வாங்கியதாக அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி எங்கு எப்போது

வாங்கினார் என்பது குறித்து அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்படவில்லை.

10.6. மேலும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 29 மதுபான பாட்டில்களை நாமக்கல் உதவி ஆணையர்(கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்ததாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 சாட்சியமளித்துள்ளார். ஆனால் அவ்வாறு மதுபான பாட்டில்களை ஒப்படைத்ததற்கான ரசீதுகளையோ அல்லது கடிதத்தையோ நீதிமன்றத்தில் ஒப்படைக்காதது உண்மையில் எதிரியிடம் இருந்து மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

10.7. இவ்வழக்கில் மேற்படி அ.சா.2 கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டில்களில் இருந்த திரவம் மதுபானம் தானா என்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மேற்படி மதுபாட்டில்களில் இருந்த திரவத்திலிருந்து மாதிரிகள் எடுத்து வேதியியல் ஆய்வுக்கு அனுப்பாதது அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக அமைகிறது.

10.8. பொதுவாக ஒரு வழக்கில் புகார்தாரரே புலன் விசாரணை அதிகாரியாகவும் இருக்கக்கூடாது என்ற நிலையில் இவ்வழக்கில் அ.சா.2 சம்பவம் குறித்து தன்னிச்சையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணையையும் மேற்கொண்டுள்ளது எவ்வகையிலும் ஏற்கத்தக்கது அல்ல. இவ்வழக்கில் அ.சா.2 குற்றத்தடுப்பு நடவடிக்கையாக ரோந்துபணிக்கு சென்றபோது எதிரியின் வசம் இருந்த 29 மதுபான பாட்டில்களை கைப்பற்றியதாக கூறப்படும் நிலையில் அ.சா.2 மேற்படி குற்றச்சம்பவம் தொடர்பாக தனி அறிக்கை எதுவும் தயார் செய்யாமல் அவரே நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் புலன் விசாரணை அதிகாரியாக இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பதும் ஏற்க்கத்தக்கது அல்ல.

**10.9.** இவ்வழக்கில் அ.சா.2 எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கு பின்னிட்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவோ அல்லது பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயாரிக்கவோ முற்படாதது இவ்வழக்கு புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்பதை ஊர்ஜிதம் செய்கிறது.

**10.10.** இவ்வழக்கில் எதிரியிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றப்பட்டது என்ற பொருண்மையை அரசு தரப்பில் நிரூபிக்காததாலும், புலன் விசாரணையானது முறையாக நடைபெறாததாலும், எதிரி அளவுக்கு அதிகமான மதுபாட்டில்களை சட்ட விரோதமாக தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபித்ததாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிக கவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) r/w 4(1)(a) TNP Act ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு

காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04–ஆம் நாள் சனிக்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.04 11:11:30 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| **வரிசை எண்** | **சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் பங்கு** |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | ராமச்சந்திரன் | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 2. | அ.சா.2 | தமிழ்குமரன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

| **வரிசை எண்** | **ஆவணங்களின் வரிசை** | **ஆவணங்களின் பெயர்** | **ஆவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்–** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–</u>** இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.04 11:11:35 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**<u>குறிப்பு–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.

2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.04 11:11:40 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>CASE SUMMARY</u>

**<u>CC-380/2025, Cr.No.158 /2025</u>**
(CNR.No. TNNM-14-001040-2025)
<u>SENDAMANGALAM POLICE STATION</u>

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 07.08.2025 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 12.01.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS | NIL |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | <table><tr><td>Witness examined as</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr><tr><td>PW1-Ramachandran</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr><tr><td>PW2-Lenin</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr></table> |
| vii | Date of examination of the accused under section 351(1)(b) of the Code | 30.06.2026 |

| | | |
|---|---|---|
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.07.04 11:11:47 +0530

Judicial Magistrate,

Sendamangalam.